# அகமலர்கள்

17 DEC 2008

மாத இதழ்

ஆவணி 2008




ம.வலன்ரீனா
7A

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.


உளநலத்திறன் விருத்திக் கழகம்.
யா / நாவற்குழி மகா வித்தியாலயம்,
நாவற்குழி, கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் பதிவுகள்.....



இவ் வருடத்தின் ஆசிரியர் தின நிகழ்வுகள் எமது பாடசாலையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யா/வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்ற திரு. ஆ. சி. நடராஜா அவர்கள் மங்கல விளக்கேற்றுகிறார்.



எமது வலயக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு. கு. பிரேமகாந்தன் அவர்கள் எமது வித்தியாலய கணனி அறையினைத் திறந்து வைத்த போது...........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகமலர்கள்.

**மாத இதழ் ஆவணி 2008**

'அகங்கள் மலர்வதால் அவலங்கள் மறையும்'

அகம் - 01 மலர் - 04

### இதழாசிரியர்கள்;

செல்வன் தி. புஸ்பகாந்.
செல்வி எஸ். பிரியதர்சினி.

பொதுசன நூலகம்
17 DEC 2008
மாநகரசபை யாழ்ப்பாணம்

## வெளியீடு:

*உளநலத்திறன் விருத்திக் கழகம்.*
*யா / நாவற்குழி மகா வித்தியாலயம்,*
*நாவற்குழி,கைதடி.*

## நாங்கள் பேசுகின்றோம்:

வணக்கம்,

எங்களின் கழகத்தினது மாத வெளியீட்டின் இன்னுமொரு இதழோடு உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். எங்கள் கைவண்ணங்களையும் திறமைகளையும் அச்சுக்கலைக்கூடாக மாதாமாதம் உங்களுக்கு வழங்கும் எமது பெருவிருப்பின் விளைவாக இச்சஞ்சிகை உங்களது கரங்களில் தவழ்கிறது.

ஆகஸ்ட்மாத பாடசாலை விடுமுறை உட்பட, அதன் பின்னரான காலப்பகுதியில் எமது பிரதேசத்தில் காணப்பட்ட அசாதாரண வாழ்வியல் சூழல் காரணிகளால் எமது இச் சஞ்சிகை இதழின் மாத வெளியீட்டில் சிறிது தாமதம் ஏற்பட்டுவிட்டது. அதற்காக நாம் மனம் வருந்துகின்றோம். இன்று எமது பிரதேசத்தில், எமது திட்டமிடலுக்கு ஏற்ப இயங்குவது என்பது அசாத்தியமான தொன்றாக அல்லவா இருக்கின்றது. இருந்தும் எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகம் கொடுத்தபடி எமது முயற்சிகள் என்றென்றும் உங்களது பலமான ஆதரவுடன் தொடரும்.என்ற உறுதியோடு விடை பெறுகின்றோம்.

அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்றி.

- இதழாசிரியர்கள்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
கிளை

எங்களின் வளர்ச்சிக்காக உங்களின் ஆகக்குறைந்த அன்பளிப்பு 25 /=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


| எது? | எவரால்? | எங்கே |
|---|---|---|
| எனக்கு மிக மிக மகிழ்ச்சி தரும் நிகழ்வுகள் | இ. அனுராஜ் தரம் 9A | 1 |
| எமது அன்னையின் பாசம் | இ.றகிலன் தரம் 10B | 1 |
| படித்துவிட்டு வேலை தேடிச் செல்லும் | ச.கௌசிகா | 2 |
| சேர் பொன்.இராமநாதன் | சிவானுஜா | 4 |
| மழை | எஸ்.ஸ்ரெலின் | 4 |
| புத்தாண்டு | எஸ்.ஸ்ரெலின் | 4 |
| எனது அம்மா | சி.தர்சினி | 5 |
| தமிழ் | செ.றொசானி | 5 |
| கல்வியின் மகிமை | | 5 |
| வாழையின் சுயசரிதை | செ.கோபினா | 5 |
| அம்மா | யோ.லவநீதன் | 6 |
| எனது வீடு | செ.கோபினா | 6 |
| அம்மா | எஸ்.பிரியதர்சினி | 7 |
| சுமைதாங்கி ஆக்காதீர்கள் | ப.நிலைக்சன் | 7 |
| எனது அன்பின் அப்பா | செ.அனிற்றாமயூரி | 7 |
| காலம் கடந்த ஞானம் | செ.அனிற்றாமயூரி | 7 |
| நீளமான ஓவியம் | வீ.றேகன் | 8 |
| கேள்வி 2,பதில் 1 | ந.பவதாரணி | 8 |
| ஜூ ன் 2008 இல் பத்திரிகைச் செய்திகளில்....... | | 9 |
| விடுகதைகள் | பா.திலக்ஸ்சன் | 10 |
| கவிச்சோலை | எஸ்.பிரியதர்சினி | 11 |
| ரோஜா மலர் | சு.அபிராமி | 12 |
| அன்பு | எஸ்.ஸராலின் | 12 |
| My Self | S.Janarthanan | 12 |
| எனது எதிர்கால விருப்பம் | பீ.வினிப்பிரிடா | 12 |
| உலக வரலாற்றில் ஜூ ன் மாதத்தில் நடந்தவை | | 13 |
| தங்க அப்பிள் | சு.டிலந்தன் | 13 |
| வன்முறைகள் | பெ.சிபோரா | 15 |
| பொதுஅறிவு | கோ.தாரங்கினி | 16 |
| என்னை இழந்தேன் | ர.நிதர்சன் | 16 |
| தகவல்துளிகள் | தி.புஸ்பரூபன் | 17 |
| எனக்கு நடந்த துயரமான நிகழ்வு | ஜெ.புளோரா | 17 |
| எனது நண்பி | இ.தேனுசா | 17 |
| எங்கள் தூரிகைகளில் இருந்து....... | | 18,19,20 |
| பொதுஅறிவுப் போட்டி | | 21 |
| வினோத புதிர்ப்போட்டி | | 22 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனக்கு மிக மிக மகிழ்ச்சியைத் தரும் நிகழ்வுகள்:

பரீட்சையில் சித்தியடையும் போது.
பாடசாலையில் நடந்த விளையாட்டில் வெற்றி பெற்றபோது.
நாம் விளையாடும் போது சிறந்த வீரனாக தெரிவு செய்யும் நிலையில்.
நாம் பூங்காவைப்பார்க்கும் போது.
மிருகக்காட்சிசாலைக்குச் சென்றபோது.
மலைச் சிகரத்திற்கு சென்றபோது.
நாம் கடற்கரைக் காட்சியைப்பார்க்கும் போது.
எனக்கு விரும்பிய பொருட்களை வாங்கும் போது.
அழகான பூந்தோட்டத்தைப் பார்க்கும் போது.
எனது பிறந்த நாளின் போது.
கண்காட்சி ஒன்றைப்பார்க்கும் போது.
சிறந்த கதைகளை வாசிக்கும் போது.
தொலைக்காட்சியில் எனக்குப்பிடித்த பாடல்களைப் பார்க்கும் போது.
ஒரு அழகான வீட்டைப்பார்க்கும் போது.
புது வருடப்பிறப்பின் போது.
எனக்கு புது துவிச்சக்கர வண்டி வாங்கும் போது.
எனது நண்பர்களைப் பார்க்கம் போது.
செல்லப்பிராணிகளை வளர்க்கும் போது.
அன்புள்ள குடும்பத்தில் இருக்கும் போது.
எனக்கு பிடித்த உணவை உண்ணும் போது.
சுறு சுறுப்பாக இருக்கும் போது.
நண்பர்களுடன் ஒற்றுமையாக இருக்கும் போது.
நாம் வகுப்பறையில் ஒற்றுமையாக இருக்கும் போது.
அழகான தென்னந் தோப்பை பார்க்கும் போது.
நாம் நல்லூர் திருவிழாவிற்கு செல்லும் போது.
எமது ஊரில் கொண்டாட்டத்தின் போது.
நாம் புது ஆடை அணியும் போது.

இ. அனுராஜ் தரம் 9A

## எனது அன்னையின் பாசம்.

*எனது அம்மா மிகவும் நல்லவர்*
*அவர் என்னை அன்போடும் பாசத்தோடும் அரவணைப்பார், நோய் வரும்போது மிகவும் கவனத்துடன் என்னைப் பாதுகாப்பார்.*
*எனது தாய் எனக்கு பாலூட்டி சோறூட்டி வளர்த்தார்.*
*எனது அன்னை என்னை பாடசாலைக்கு அனுப்பும் போது மிகவும் கவனத்துடன் அனுப்பி வைப்பார், அவருடைய உணவை தான் உண்ணாமல் எமக்கு தந்து பசி போக்குவார்.*
*எனது அன்னை என்னை தனியாக ஓரிடத்திற்கும் விடுவதில்லை.*
*அவர் என்னை அன்பாக நேசிப்பார் பாசத்துடன் அழைப்பார்.*
*எனது அன்னை என்னை கவனமாக படிப்பிக்கின்றார்.*

இ.றகிலன் தரம் 10B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்துவிட்டு வேலை தேடியபோது ......

(வழங்கப்பட்ட தலைப்புக்கு மாணவர்கள் எழுதித் தந்த சிறுகதைகளுள் ஒன்று)

சங்கர் கல்லூரிப்படிப்பை முடித்ததும் அவனை தோட்டத்தில தன்னோடு வேலை செய்யும்படி அவனது அப்பா கூறினார். ஆனால் சங்கருக்கு வெளிநாட்டுக்கு செல்லத்தான் விருப்பம். இதனைத் தந்தையிடம் கூறினான். தந்தையும் அதற்குச்சம் மதித்தார்.

சங்கருக்கு வெளிநாட்டுக்கு போகத் தான் விருப்பம் இருந்தது. ஆனாலும் தந்தையை விட்டுப்பிரிய மனமில்லை. சங்கர் பிறந்து மூன்றாவதுநாள் அவனது தாய் சரஸ்வதி இறந்து விட்டாள். இதனால் அன்று முதல் தந்தையின் அரவணைப்பிலேயே வளர்ந்து வந்தவன். சங்கர் குழந்தையிலிருக்கும் போது தன் தந்தை படும் கஸ்ரங்களை நன்கு அறிந்தவன். தாயன்பு என்ன என்பது சங்கருக்கு தெரியாது. அதனால் அவனது தந்தை மகனை கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தார். சங்கருக்கு கவலை, அழுகை என்பது என்ன என்றேதெரியாது. அவ்வளவுக்கு சந்தோசமாக வளர்ந்தவன்.

சங்கரது தேவைகளையும் விருப்பங்களையும் நல்லபடியாக நிறைவேற்றினார் அவனது தந்தை. இதனால் அவன் வெளிநாட்டுக்கு செல்ல விரும்பியதையும் தந்தை மறுக்கவில்லை. ஒருவாறு வெளிநாட்டுக்குச் செல்ல ஆயத் தமானான். சங்கர் அன்று காலைக் கடன்களை முடித்துவிட்டு உடைகளை மாற்றினான். நீலநிற கழுத்துப்பட்டி காலுக்கு கறுப்பு நிறச் சப்பாத்து தலையில் நடுவே உச்சி பிரித்து ஒரு பக்கமாக விட்டிருந்தான். அவனது முகத்தில் அறிவு ஒளிவிசியது. மொத்தத்தில் அவன் படித்தவன், நாகரிகம் தெரிந்தவன் என்பதையும் அவனது நடை, உடை, பாவனையின் மூலம் அறிய முடிந்தது.

தனது தந்தையை சாமியறைக்குள் அழைத்தான். தந்தையின் கால்களில் வீழ்ந்து வணங்கினான். கண்களிலிருந்து கண்ணீர் மல்கியது. தந்தையை விட்டு பிரிவதை எண்ணிய அவனது மனம் வெதும்பியது. கவலையினால் அவனது முகம் சிவந்தது. உதடுகள் துடிக்க பற்களை இறுகக் கடித்தான். இதனைப் பார்த்த அவனது தந்தை தனது கைகளினால் சங்கரின் முகத்திலிருந்து கண்ணீரைத்துடைத்தார். இருவரும் ஒருவரையொருவர் கட்டிஅணைத்து முத்தமிட்டனர். தனது தாயின் படத்தைப் பார்த்து கண்ணீர் சிந்த தொட்டு வணங்கினான். எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு தந்தையிடம் விடை பெற்றான். சென்று வா மகனே என்று தந்தை வழியனுப்பி வைத்தார்.

அவன் வீட்டுக்கு வெளியே சென்று, ஒரு முறை வீட்டைத் திரும்பிப் பார்த்தான். ஒரு பெருமூச்சு விட்டான். தனது வாழ்க்கையைப்பற்றி எண்ணியவாறு நடையைத் தொடர்ந்தான்.

எல்லா கஷ்டங்களையும் தாங்கிக் கொண்டு விமான நிலையத்தினுள் நுழைந்தான். அங்கே வெளிநாட்டுக்குச் செல்பவர்கள் ஒரு இடத்தில்கூடி நின்றார்கள். அவனும் அங்கே சென்றான். அந்த சூழ் நிலையையும் நடைமுறை களையும் பார்க்கும்போது அவனது உள்ளத்திலிருக்கும் கவலைகள் மெல்ல மெல்ல மறைந்தன. புத்துணர்ச்சி ஒன்று அவனுக்குள் பிறந்தது. அவனது மூளை விரைவாக வேலை செய்தது. தன்னுடன் படித்தவர்கள் நண்பர்கள் யாராவது நிற்கிறார்களா என்று அவனது கண்கள் சல்லடைபோட்டு தேடின. அங்கே அவனுக்கு தெரிந்தவர்கள் யாருமில்லை.

சிறிது நேரத்தின் பின்னர் எல்லோரையும் முகவர்கள் அழைத்தனர். எல்லோரும் ஒருவர்பின் ஒருவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானத்தினுள் நுழைந்தனர். அவனும் விமானத்தினுள் ஏறி ஆசனத்தில் உட்கார்ந்தான். விமானத்தின் யன்னல் கரையில் இருந்த அவனை குளிர்மையான காற்று வருடிச் சென்றது. வானுயர்ந்த கட்டடங்களும் மலை களையும் கடந்த வண்ணம் விமானம் பறந்தது.

நீண்ட நேரத்தின் பின் விமானத்தின் வேகம் குறைவதுபோன்று ஓர் உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. யன்னல் வழியாக சற்று எட்டிப்பார்த்தான். விண்ணைத் தொடும்கட்டடங்கள். விட்டு விட்டு ஒளிரும் மின் குமிழ்கள். விமானம் தரையிறங்கத் தொடங்கியது. விமானங்கள் வரிசையாக நின்றன. உயர்ந்த வெள்ளை மனிதர்கள் கறுப்பு கோர்ட்டுடன்ஆங்காங்கே நின்றிருந்தார்கள். விமான ஓடுதளத்தில் விமானம் இறங்கியது. அழகிய இந்த காட்சிகள் அவனை மெய் சிலிர்க்கச் செய்தன.

அவன் விமானத்திலிருந்து இறங்கினான். தனது பெட்டியை ஒரு கரையில் வைத்து விட்டு உடைகளைச் சரி செய்தான். தான் நின்ற இடத்திலிருந்து மேற்கு பக்கம் சிறிது திரும்பிப்பார்த்தான். அங்கே கண்ட காட்சியினால் அவன் ஒரு நிமிடம் திகைத்து விட்டான். பச்சை நிறச் சேலையுடன், தலையில் பூமாலைகள் நிறையச் சூடி முகத்தில் அன்பும், அமைதியும் குடிகொண்டிருந்தது போல் தெரிந்தது. அந்த உருவம் அவனை நோக்கி வந்தது. அது வேரு யாருமல்ல அவனது தாயைப் போன்ற ஒரு பெண். அவனது உள்ளம் மகிழ்ச்சியால் திளைத்தது. அந்த பெண்ணும் சங்கருடன் வந்து கதைத்தாள். தான் இலங்கையைச் சேர்ந்தவள் என்று கூறி தன்னை அறிமுகப்படுத்தி வைத்தாள். சங்கரும் தன்னைப் பற்றிக் கூறினான். இருவரும் நண்பர்களாகிவிட்டனர். அந்தப் பெண் தனது வீட்டுக்கு சங்கரை அழைத்துச் சென்றாள். அவனும் அவளுடன் சென்றான். அவளது பெயர் சரஸ்வதி தன்னுடைய தாயைப் போன்ற உருவத்துடன் தாயின் பெயர்தான் அவளுக்கும் இருந்ததால் தாயை நேரில் பார்த்தது போன்ற உணர்வு அவனுக்கு.

சரஸ்வதி சங்கருக்கு உணவு பரிமாறினாள். பின்னர் ஓய்வு எடுப்பதற்காக கால்களை நீட்டி நிம்மதியாக இருந்தான். சில நாட்கள் கழிந்தன. இருவரும் நல்ல நண்பர்களாகி விட்டனர்.அவள் சங்கருக்கு ஆறுதலாக இருந்தாள். அவனை ஏதாவது வேலை செய்யும்படி கூறினாள்.

அவனும் அவளுடைய உதவியோடு வேலை தேடத் தொடங்கினான். அன்று காலை காலைக் கடன்களை முடித்து விட்டு ஆயத்தமானான். காலை எட்டு மணிக்கு காரில் ஏறி உட்கார்ந்தான். காரை நல்ல வேகத்தில் ஓட்டிச் சென்றான். அவன் காரை வேகமாக ஓட்டுவதுடன் அவனது உள்ளமும் வேகமாக சிந்திக்கத் தொடங்கியது.

அவனது உள்ளத்தில் பல்வேறு எண்ணங்கள் அலைமோதின. தந்தையின் ஞாபகம், தாயின் மரணம், தனது படிப்பு எல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. ஏதாவது வேலை தனக்கு கிடைக்க வேண்டும். அதன் மூலம் தந்தையைக் கவனிக்க வேண்டும் என்ற எண்ணங்கள் உண்டாகின. ஆனால் அவனது உள்ளத்திலிருந்த கற்பனைகள், எண்ணங்கள் எல்லாம் ஒரே நேரத்தில் சாம்பலாகி விட்டன. அவனது எண்ணங்கள் வேரோடு சாய்ந்தது.

வேகமாக சென்று கொண்டிருந்த அவனது காரை நோக்கி எதிரே இன்னொரு கார்வந்தது. மழைக்காலம் ஆகையால் வீதி வழுக்கியது. இதனால் எதிரே வந்த கார் சங்கரின் காரின் மேல் பாய்ந்தது. காரை ஓட்டிக் கொண்டிருந்த சங்கர் யன்னல் வழியாக வெளியே தூக்கி வீசப்பட்டான். அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபத்தில் அவன் நீண்ட தூரத்துக்கு அப்பால் ஒரு மரத்தின் கீழ் விழுந்தான். அருகில் நின்றவர்கள் அவனை அவசரஅவசரமாகத் தூக்கிக் கொண்டு வைத்தியசாலைக்குச் சென்றார்கள். அங்கு அவன் அவசரசிகிச் சைப்பிரிவில் சேர்க்கப்பட்டான். எனினும் சிகிச்சை பயனளிக்காது அவனது உயிர் உலகை விட்டுப்பிரிந்தது. அவனது எண்ணங்கள் யாவும் கலைந்து போய் விட்டன. அவன் இறந்தது அவனது தந்தைக்கு தெரியாது. அவன் திரும்பி வருவான் என்று தந்தை ஆவலுடன் இருக்கின்றார். அவருடைய முடிவுதான் என்னவோ?

*ச.கௌசிகா தரம் 13*

# சேர். பொன். இராமநாதன்

சேர் பொன். இராமநாதன் அவர்கள் பொன்னம்பலவாணர் முதலியாருக்கு மகனாக 1851 ஆம் ஆண்டு சித்திரை மாதம் பதினாறாம் திகதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மானிப்பாயில் பிறந்தார். இவர் இலங்கையின் தலை சிறந்த அரசியல் ஞானியாய் விளங்கினார். அரசியல் வாழ்வில் இவரைப் போல் தொண்டாற்றிய வேறுயாருமிலர்.

விளையும் பயிரை முளையிலே தெரியும் என்ற பழமொழி போல் இராமநாதன் அவர்கள் இளமைப் பருவத்திலேயே தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளையும் கொழும்பு றோயல் கல்லூரியில் கற்றார். பின் உயர்தரக்கல்வியை கற்பதற்காக சென்னையை அடைந்தார. அதன்பின் இங்கிலாந்து சென்று நியாய வாதிக் குரிய சட்ட நூலியலில் பயின்று தனது இருபதாவது வயதில் பிரபல சட்டத்தரணி ஆனார். பின் இலங்கைக்கு வந்து சட்டத்தரணியாக தொழில் புரிந்து பணமும் புகழும் ஈட்டினார்.

இராமநாதன் அவர்கள் அரசாங்க சபையில் 1879 ஆம் ஆண்டு முதல் 1892 ஆம்ஆண்டுவரை தமிழர் பிரதிநிதியாக இருந்து தொண்டாற்றினார். அக்காலத்திலேயே யாழ்ப்பாண புகையிரதப் பாதை திறக்கப்பட்டது. தபால் நிலைய சேமிப்புப் பழக்கமும், சட்டக்கல்லூரியும் இவரது முயற்சியால் தொடங்கப்பட்டன.

இப் பெரியார் தமிழர்களுக்கு மாத்திரமன்றி, மற்றைய சமூகத்தவருக்கும் அதாவது சிங்களவர், முஸ்லிம்களுக்கும் தொண்டாற்றி அவர் களது நன்மதிப்பையும் பெற்றார். 1915 ஆம் ஆண்டு நடைபெற்ற வகுப்புக் கலகத்தில் மக்கள் அடைந்த இன்னல்களை நீக்கும் பொருட்டு இங்கிலாந்து சென்று இலங்கை அரசியல் மேலதிகாரிகளுக்கு எதிராக வாதாடி அவற்றை நீக்கினார்.

இவர் 1930 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் இரண்டாம் திகதி இறையடி எய்தினார். இவரது பூதவுடல் மருதனார் மடத்தில் சமாதியில் வைக்கப்பட்டுள்ளது. கொழும்பில் பழைய பாராளுமன்ற கட்டடத்திலும் இவரது சிலை நிறுவப்பட்டுள்ளது.

**சிவானுஜா தரம் 9A**

## மழை

மனதை குளிரச் செய்ய
மண்மீது பொழியும் மழை
ஏழைமக்கள் மனங்குளிர
எட்டுத் திசையும் கொட்டும் மழை

பாடி ஆடி வேலை செய்ய
பட்டுத் தெளிக்கும் மழை
மகிழ்ச்சியில் திளைப்பதற்கு
மாரியாய்ப் பொழியும் மழை

## புத்தாண்டு

*புத்தம் புதிய ஆடை அணிந்து -நாம்*
*புத்தாண்டு கொண்டாடுவோம்*
*உறவினரின் வருகை கண்டு -என்றும்*
*உற்சாகமாய் நாம் இருப்போம்*

*பல வகை பாணங்களுடன் - நல்ல*
*பழங்களும் சேர்த்து வைப்போம்*
*அயலவரை அரவணைத்து - என்றும்*
*அன்புடன் வாழ்த்திடுவோம்.*

*எஸ். ஸ்ரெலின்லின் தரம்- 8A*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது அம்மா

வெள்ளை யுடை அணிந்து –தினம்
விடியு முன்னே புறப்பட்டு
துள்ளியோடும் முயல்கள் போல் – நாம்
பள்ளி செல்வோம் பாலகராய்

பள்ளிக் கல்வி முடித்து நாம் – வீடு
மெல்லச் சென்றே சேர்ந்திடுவோம்
எம்மைக்கண்ட அன்னையும் தான்– தூக்கி
அன்பு முத்தமிட்டிடுவாள்.

சி.தர்சினி. தரம் 7A

> உண்மை என்பது அழகு.
> அழகு என்பது உண்மை.
> இது தான் உங்களுக்கு தெரிந்தது
> உங்களுக்கு தெரிய வேண்டியதும் கூட.

## தமிழ்

தமிழுக்கு அமுதென்று பெயர் – இதைத்
தரணியிலே கூற நீ வந்தாயோ?
தமிழன்னை பெருமையினை
தம்பி நீதான் அறிந்தாயோ ?
தங்கத் தமிழே தமிழரின் வழியே– எம்
தாயகம் காக்க வந்தவளே,
தமிழர் பண்புக்கீடாய்
தரணியில் பண்புமுண்டோ?
தமிழ் காத்த ஔவையாரும்
தரணியில் முதற் புலவரானார்
தமிழ் மொழியாம் எம் தாய்மொழி – என
தனக்கென ஓரு இடத்தைப் பிடித்தாயோ?
தமிழன்னை பெற்ற பெண்ணே
தமிழ்ப் பெண்ணாய் வாழ்வாய் நாளும்
தங்கமே தமிழ் மொழியே – என் உயிரே
தலை வணங்கி நிற்கின்றேன் – நீ வாழ்கவே.

**செ.றொசானி தரம் 11**

## கல்வியின் மகிமை

கல்வி என்பது எமது மக்களின் அறிவாகும்.
இது எமது மிகப் பெரிய சொத்தாகும்.
கல்வி என்பது சிலையில் எழதிய எழுத்துப் போலவே இருக்கும்.
அதனால் நெருப்பிலும் இது வேகாது எனவும் கூறுவார்கள்.
எமது உள்ளத்திற்கு கல்வியறிவு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.
செல்வத்தில் சிறந்த செல்வம் கல்விச் செல்வமும் அறிவுச் செல்வமும் என எமது பாட்டிமார்கள் கூறியபடி மகிமை பெற்றிருக்கும் இக் கல்வியை திருட முடியாது. இது எமக்குள் குடியிருப்பதாகும்.
கல்வி என்பது ஒரு ஆனந்தமான செல்வம்,
ஈடு இணை இல்லாச் செல்வம்.
எமக்கு மகிழ்வான வாழ்வுக்கு ஆனந்தமும் அறிவும் தான் தேவை.
இதனை கல்வி மட்டுமே தந்துநிற்கும் கல்வியினைக் கற்ற பலரும் கல்வியினால் பெரும் ஆதாயங்களையே பெற்றுள்ளனர்.

எனவே இவர்களைப் போல நாமும் உயர கல்வியினை எவ்வளவு துயரப்பட்டாலும் கற்று உயருவோம்.

## வாழையின் சுயசரிதை

எனது பெயர் வாழை
நான் கதலி இனத்தைச் சேர்ந்தவன்.
நான்செழிப்பானசெம்மண்தோட்டத்தில் பிறந்தேன்
எனது தோட்டக்காரர் நல்லவர்.
அவர் எனக்கு நன்கு பசளையிட்டார்.
தினமும் எனக்கு நீர் பாய்ச்சினார்.
இதனால் நான் வளர்ந்தேன்
பசுமையான இலைகளுடன் எட்டடி
உயரம்வரை வளர்ந்திருந்தேன்.
பின்னர் பொத்தி ஈன்று பெரிய குலை
தள்ளினேன்.
என் இலையை மக்கள் அடிக்கடி
வெட்டி உணவு உண்ண பயன்
படுத்திக் கொள்வார்கள்.
எனது பொத்தியையும் உணவு
சமைப்பதற்கு எடுத்துச் சென்றார்கள்.
என்ன கொடுமை: நாரும் இலையும்
பொத்தியும் தந்த நான் குலைக்காக
வெட்டிச் சரிக்கப்பட்டேன்.
நான் இறந்தாலும் என் இனம்
தொடர்ந்து மக்களுக்கு
உதவிக்கொண்டே இருக்கும்.
நாங்கள் வாழையடி வாழையாக
வளர்ந்து கொண்டே இருப்போம்.

*செ.கோபினா தரம் 8B*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா......

கருவில் இருக்கும் போதிலே எம்மைக்காத்த தெய்வம் அம்மா
பத்து மாதம் சுமந்து எம்மை பெற்றெடுத்த அம்மா
பாசம் காட்டி நேசம் காட்டி வளர்த்து வந்த அம்மா
கஸ்டம் சொல்லி நஸ்டம் சொல்லி வளரத்து வந்த அம்மா
இந்தப் புதிய உலகை எமக்கு காட்டி வளர்த்த அம்மா
கல்வி என்ற பேரருளைச் சொல்லித் தந்த அம்மா
அம்மா என்ற சொல் எம்மை எப்போதும் காக்கும்.

யோ. லவங்கீதன் தரம் 9B

## எனது வீடு

எனது வீடுஒரு சிறிய வீடு. அந்த வீடு சிறிதாக இருந்தாலும் அது ஒரு அழகான வீடாகும் அந்த வீட்டில் எனது அப்பா, அம்மா, பெரியண்ணா, சின்னண்ணா, நான், தங்கை வாழ்கின்றோம். எனது வீட்டுக்கு பக்கத்தில் எனது அம்மம்மா வீடு உள்ளது. அந்த வீட்டில் எனது அம்மப்பாவும், அம்மம்மாவும் உள்ளனர். நாம் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருப்போம். அந்த வீட்டில் அழகான பூஞ்செடிகள், புற்கள், மரங்களும், அழகான பறவைகள் கோழிகள் அணில், சேவல் என பல பிராணிகள் இருக்கின்றன. அந்தப் பறவைகளும் பிராணிகளும் எனது செல்லப்பிராணிகளாகும். அதற்கு ஒவ்வொருநாளும் உணவு வைப்பேன். அந்தப் பிராணிகளும் என்மேல் அன்பு கொண்டுள்ளன. அதை நான் விரும்புவேன். எனது குடும்ப உறுப்பினர்களும் அந்தச் செல்லப் பிராணிகளுக்கு உணவு கொடுப்பார்கள். நான் இல்லாவிட்டாலும் எனது குடும்பம் உணவு வைப்பார்கள். இப்படியே எனது குடும்பத்தினர் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் மீண்டும் தொடரும் மிடுக்குடன்

செ. கோபினா தரம் 8B

எங்களுடைய மிகப் பெரிய மகிமை என்பது ஒரு போதும் விழாமல் இருப்பதில் தங்கியிருப்பதில்லை, விழுகின்ற ஒவ்வொரு முறையும் மீண்டும் வீறுகொண்டு திரும்ப எழுதலே மகிமை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா

பத்து மாதம் சுமந்து
பாலூட்டி வளர்த்த அம்மா
பாசமாய் உணவு தந்து
பக்குவமாய் பார்த்த அம்மா
அறிவுரைகள் பலவும் தந்து
அன்பினிலே வளர்த்த அம்மா
கல்வியை எமக்குத் தந்து
கருத்தாய் காத்த அம்மா
பாசமாய் என்னைப் படைத்து
பாரினிலே உயர்த்திய அம்மா
அம்மா என்ற சொல்லுக்கு
அர்த்தமோ கோடி கோடி
அம்மாவைப் பற்றிச் சொல்ல
ஆயுள் முழுவதும் போதாது
அகிலமே மாறினாலும் அம்மாவின்
அன்பு மாறாது.

எஸ். பிரியதர்சினி தரம் 10A

## எனது அன்பின் அப்பா

கருவறைதன்னில் சுமக்காவிடினும்
காப்பது என் அப்பா
சிறு பராயம் தொடக்கம் என்னை
சிறப்பாய் வளர்த்தவர் என் அப்பா

குறை ஒன்றும் ஏற்படாமல்
குணம் சிறக்க வாழ வைத்தார் என் அப்பா
இரத்தத்தை வியர்வையாக்கி
இராமுழுதும் பாடுபட்டார் என்அப்பா

தேவனை அறியும் அறிவைத் தந்து
தேவனையே தேடவைத்தார் என் அப்பா
கர்த்தரே தெய்வம் என்று
கருத்தாய் ஊட்டி வளர்த்தார் என் அப்பா

செ. அனிற்றாமயூரி தரம் 11

## சுமைதாங்கி ஆக்காதீர்கள்

பள்ளி நோக்கி அன்புடனே பறந்து-
செல்லும் எம்மை
குதூகல வானில் சிறகடிக்க விடுங்கள்
ஏ. எல். பரீட்சை என
அடுக்கடுக்காய் புத்தகங்கள்
அத்தனையும் வேண்டாமே
இப் போதே முடியவில்லை
சுமைதாங்கி எம்மால்
அளவுடனேதாருங்கள் ! அவ்வளவும்
நாம் கற்று
வளமுடனே வாழ்ந்திடுவோம்.

நிலைக்சன் தரம் 13

**எளிமையும், உண்மையும்
எப்பொழுதும்
உங்களை உயர்த்தும்.**

## காலம் கடந்த ஞானம்

*அழித்தோம் இயற்கையையே,
அனர்த்தங்கள் உண்டாயிற்று.
அனர்த்தங்கள் எம்மை
அனாதைகள் ஆக்கிற்று.
அன்னத்திற்காய் இப்போ
அடி பிடி ஆயிற்று.
திருப்பு முனை கிடையாது.
புரிகிறது, ஆனாலும்
எம்மால் முடியவில்லை, காலமது
கடந்து போனது.*

*செ. அனிற்றாமயூரி தரம் 11*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீளமான ஓவியம்

1.23 இலட்சம் ஓவியங்களை வரைவது கடினம் அல்ல. காரணம் ஒரு ஓவியத்தை ஒருவர் வரைந்தால் போதும் ஆனால் அத்தனை ஓவியங்களையும் ஒன்றாக இணைப்பது பெரும் வேலை. அதுமட்டும் இன்றி, அத்தனையும் கிளிப்பது என்பது விபரிக்க முடியாத வேலை. பெரும் சாதனையே இதே இத்தனையும் ஜேர்மனியில் ஜேர்மனியின் பெர்லின் நகர 1.23 இலட்சம் ஓவியங்களை நீண்ட ஒவியச் சுருளை இருக் ஒலிம்பிக் மைதானத்தில் மிக அந்நாட்டு போக்குவரத்துதுறை கைகள் மீது விரித்துள்ளனர். சுமார் 1.23 இலட்சம் ஓவியங் அழைப்பு விடுத்ததன் பேரில் ஒன்றிணைத்ததில் 37கிலோ கள் வரையப்பட்ட தாள்களை அதை மைதானத்தின் 75,000 மீற்றர் நீளத்துக்கு நீண்டது. சாதனை படைக்கப் இருக்கைகள் மீது விரித்து கின்னஸ் போக்குவரத்து பட்டது. அத்தனை ஓவியங்களிலும் இங்கு தொடர்பான படங்களே வரையைப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

வீ.றேகன் தரம் 13

## கேள்வி 2, பதில் 1

1)பட்டம் பறப்பது எதனால்?
படடுப்பூச்சி சிறப்பது எதனால்?

2)நல்ல பாம்பு தலை தூக்குவதேன்?
நாம் "கமரா" முன் நிற்பது ஏன்?

3)காடு குறைவது ஏன்?
கால்வாய் நீள்வது ஏன்?

4)பந்து எழும்புவது ஏன்?
பையன் அழுவது ஏன்?

5)கொட்டாவி வருவது எதனால்?
பிள்ளை அழுவது எதனால்?

6)தோட்டத்தைப் பதப்படுத்துவது எப்படி?
தீனியைக் கோழி தின்பது எப்படி?

7)புத்தகத்தின் ஆடை எது?
இரத்தம் உறிஞ்சும் உயிரினம் எது?

8)மலரால் தொடுக்கப்படுவது எது?
சூரியன் மறையும் நேரம் எது?

விடைகள்
1) வாலால்
2) படம் எடுக்க
3) வெட்டுவதால்
4) அடிப்பதால்
5) பசியால்
6) கொத்தி கொத்தி
7) அட்டை
8) மாலை

ந.பவதாரணி
தரம் 6A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூன் 2008 இல் பத்திரிகைச் செய்திகளில் ...

**1. கடற்பாசியிலிருந்து பயோ எரிபொருள்**

வானிலை மாற்றத்திற்கு மட்டும் காரணம் இல்லாமல் சுற்றுச் சூழலை பாதிக்காத பயோ எரிபொருள் உற்பத்தி செய்ய கடற்பாசி பயன்பட உள்ளது. காட்டாமணக்கு உட்பட பல தாவரங்கள் மூலம் சுற்றுச் சூழல் பாதிக்காத வகையில் உள்ள இயற்கையான மாற்று எரிபொருள் உருவாக்கும் முயற்சியில் பல நாடுகள் இறங்கியுள்ளன. கோஸ்டாரிகா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இப்போது கடற்பாசியில் இருந்து மாற்று எரிபொருளை உற்பத்தி செய்யமுடியும் என்கின்றனர். கடற்பாசி உற்பத்தி கடந்த 1950 இல் இருந்து 60 வரை பெருகியுள்ளது. ஆசிய பசுபிக் கடலில் இருந்துதான் இதன் 91% உற்பத்தி செய்யப்படுகின்றது.

கடற்பாசியில் இருந்து மின்சாரம் தயாரிக்கமுடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பயோ எரிபொருள் தயாரிக்கலாம் என்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது புதுத்திருப்பத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கடற்பாசி இப்போது உணவாகவும் விவசாயிகளுக்கு உரமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இது குறித்து நிபுணர்கள் கூறுகையில் பல நாடுகளில் கடலில் கழிவுநீர் கலக்கப்பட்டு வருகின்றது. இதனால் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு கடல் வளம் குறைவதுடன் அதன் பயன் பாடும் பாதிக்கப்படுகின்றது. அந்த வகையில் கடல் வளம் பாதிக்காத நிலையில் கடற் பாசியை வளர்த்து அதன் மூலம் எரிபொருளை உற்பத்தி செய்தால் எதிர் காலத்தில் எரிபொருள் பற்றாக்குறையை தீர்க்க முடியும். உலகம் வெப்பமாவதையும் தவிர்க்க முடியம். என எதிர்பார்க்கப்படுகிறது.

**2. செயற்கை விழி வெண்படலம்**

உலகம் முழுவதும் தற்போது கார்னியா பாதிப்பு அடைந்தது. அதனால் பார்வை இழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் ஒரு கோடிக்கும் அதிகமாய் உள்ளது.

இந்த பாதிப்புக்குத் தீர்வாக கார்ணிய தானம் பெற்று அதைப் பொருத்துவது தான் வழியாக உள்ளது. தேவை இருக்கும் அளவிற்கு கர்ணியாதானமாகக் கிடைப்பது இல்லை இது தொடர்பாக மருத்துவ விஞ்ஞானிகள் பல காலமாக ஆய்வு நடாத்தி வருகின்றனர். இப்போது இந்த ஆய்வின் பலனாக செயற்கை கர்ணியா உருவாக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கர்டில் பிராலிட் கிறிஸ்டோபர் டேவில், டேனட் மைமால் ஆகியோர் கொண்ட குழு இந்த செயற்கை கர்ணியா உருவாக்குவதில் வெற்றி கண்டுள்ளது.

**3. இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை கண்டறிய நவீன ராடர்**

மீட்புப்பணிக்கு உதவும் அதி நவீன கருவியை இஸ்ரேலிய நிறுவனம் கண்டுபிடித்துள்ளது. இதன் மூலம் இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை எளிதில் மீட்கமுடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நவீன தொழில் நுட்பம் இராணுவம் மற்றும் மீட்புப் பணியில் ஈடுபடும் சிறப்புப்படைப் பிரிவினர்க்கும் பேருதவியாக இருக்கும் என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிறுவனம் ஏற்கனவே தயாரித்து அறிமுகப்படுத்தி உள்ள ராடர் கருவிகளைத் தான் பொலிஸாரும் இராணுவமும் பயன் படுத்தி வருகின் றனர். இந்நிலையில் தற்போது முற்றிலும் நவீனதொழில் நுட்பத்தில் வடிவமைக்கப் பட்டுள்ள இக்கருவி பல்வேறு பல்வேறு வகையான சுவரினையும் எளிதில் ஊடுருவிப்பார்க்கும் தன்மை உடையதாகும் இதனை கொண்டு கட்டட இடிபாடுகள் மற்றும் தீ விபத்துக்களால் சேதமடையும் கட்டடங்களில் யாரேனும் இருந்தால் அவர்களை விரைவாக மீட்க இக்கருவி உதவும்.

இது குறித்து கருத்து தெரிவித்த அந்நிறுவன இயக்குனர் அமீர் பெரி எவரில் எளிதில் ஊடுருவும் கருவியைத் தயாரிக்கும் திட்ட யோசனை 1960 ஆம் ஆண்டிலிருந்தே கூறப்பட்டு வந்த போதிலும் நவீன தொழில் நுட்பத்தின் மூலம் தற்போதேஇது சாத்தியமாகியுள்ளது என்றார்.

**4. உலகின் சிறந்த நகரமாக கேஹ ன்**

மக்கள் வாழ்வதற்குரிய சிறந்த இடமாக டென்மார்க் தலைநகர் கோபன் கேஹ ன் விளங்குவதாக ஆய்வொன்று தெரிவிக்கின்றது.

நியூயோர்க் லண்டன் போன்ற நகரங்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த இடம் என்று நம்மில் பலர் நினைத்துக் கொண்டு இருப்பதை பொய்யாக்கி விட்டது சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு.

மக்கள் வாழ்வதற்கு உலகில் சிறந்த இடம் கோபன் கேஹன் நகரம் என்பது அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. வடக்கு ஐரோப்பாவில் உள்ள டென்மார்க் நாட்டின் தலைநகரானகோபன் கேஹனில் தான் மக்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கான அனைத்து சூழ்நிலைகளும் உள்ளன. அதிகம் மாசுபடாத சுற்றுப்புறச் சூழல், சிறந்த போக்குவரத்து வசதி , வாழ்க்கைத்தரம், சிறந்த நகரக்கட்டமைப்பு உள்ளிட்ட காரணங்களால் சிறந்த நகரமாக கோபன் கேஹன் தெரிவு செய்யப்பட்டுள்ளது. சிறந்த 20 நகரங்கள் பட்டியலில் கூட லண்டன் நியூயோர்க் நகரங்களால் இடம் பெற முடியவில்லை. முனிச் நகரம் இரண்டாம் இடம் பிடித்துள்ளது. டோக்கியோ சூரிச், ஹெல்சிகி ஆகிய நகரங்கள் முதல் 5 இடங்களுக்குள் வந்துள்ளன.

**5. சுறா மீனில் இருந்து புற்று நோய்க்கு மருந்து.**

புற்று நோய்க்கு புதுப்புது மருந்து கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் அவுஸ்திலியா மெல்போன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். இந்த ஆராய்ச்சிக்குப் பிறகு அவர்களால் சுறாமீன் செல்களில் இருந்து புற்று நோய்க்கு மருந்து கண்டுபிடித்துள்ளனர்.

**6. கடலின் அடியில் ஏவுகணைச் சோதனை இந்தியாவைக் கண்டிக்கிறது பாகிஸ்தான்**

கடலுக்கு அடியில் இருந்து அணு ஆயுதத்தைச் செலுத்தவல்ல கே 15 ஏவுகணைச்சோதனையை இந்தியா செய்துள்ளதன் மூலம் ஆசியப் பகுதியில் ஆயுதப் போட்டி உருவாகுவதற்குரிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. என பாகிஸ்தான் தெரிவித்துள்ளதுடன் தங்கள் நாடு விரைவில் அந்த சோதனையை மேற்கொள்ளும் என்று கூறியுள்ளது.

ஆந்திராவின் விசாகப்பட்டினம் கடற்கரை அருகே 27.06.2008 அன்று செவ்வாய்க்கிழமை நீர் மூழ்கிக் கப்பலில் இருந்து செலுத் துக்கூடிய கே 15 ஏவுகணையை கடற்படையினர் வெற்றிகரமாக சோதனை செய்தார்கள்.

இந்தியாவின் இந்த செயல் ஆசியாப்பகுதி ஸ்திரத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது என பாகிஸ்தான் கடற்படைத் தளபதி அப்பூல் தாகிர் தெரிவித்துள்ளார்.

**7. சிகரெட் குடித்தால் நினைவாற்றல் குறையும்**

புகைபிடித்தால் நினைவாற்றல் குறையும் என ஆய்வுத் தகவல் தெரிவித்துள்ளது. பிரான்ஸ் நாட்டில் 35 வயது முதல் 55 வயதுக்கு உட்பட்ட அரச ஊழியர்களிடம் ஆய்வு நடாத்தப்பட்டது. அதில் புகைப்பிடிக்காதவர்களை விட புகைப் பழத்திற்கு ஆளானோர் நினைவுத்திறனில் பெரிதும் பின்தங்கி உள்ளார்கள். உரிய நேரத்தில் சிறப்பான முடிவு எடுப்பதிலும் புகைபிடிப்பவர்கள் மத்தியில் தடுமாற்றம் காணப்படுகின்றது. புகைப்பழக்கத்துக்கும் நினைவாற்றலுக்கும் தொடர்பு இருப்பது இந்த ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது. புகைபிடிக்கும் பழக்கத்திற்கு ஆளானோர் வயதான காலத்தில் உடல் ரீதியாகவும் பல்வேறு நபர்களின் பெயர்களை நினைவு வைத்திருக்க வேண்டிய பணியில் பெரிதும் பின்தங்கி உள்ளனர். புகைப்பழக்கத்திற்கு ஆளானோர் அதில் இருந்து விடுபட்டால் மீண்டும் பழையபடி நினைவாற்றல் பெறலாம் என்றும் அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

தொகுப்பு : வீ.றேகன் தரம் 13

**விடுகதைகள்.**

1. முட்டைபோல் பூ இருக்கும் தாமரை அல்ல கோணலாய் காய் காய்க்கும் புளியுமல்ல அது என்ன?
2. குட்டையான அழகிக்கு நெட்டையான ஜடை அது என்ன?
3. ஒற்றைக்கோழிக்கு வயிறு நிறைய முட்டைஅது என்ன?
4. ஆயிரம் பேர் அணி அணியாகச் சென்றாலும் தூசியே கிளம்பாது அது என்ன?
5. அடிமேல் அடிவாங்குவான் அனைவரையும் சொக்கவைப்பான் அவன் யார்?

1. எருக்கலஞ் செடி
2. கத்தரிக்காய்
3. மிளகாய்
4. எறும்பு வரிசை
5. மிருதங்கம்

அ.மக்சிகலா
தரம் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரோஜாமலர்

அழகான இதழ்களைக்
கொண்டவள் -நீ
இனிமையான அமுதங்களைக்
கொண்டவள் -நீ
வடிவான அமைப்பைக்
கொண்டவள் -நீ
துணையாக இலைகளைக்
கொண்டவள் -நீ
இதனால்த் தானே உன்னை
தேனீக்களும் வண்ணத்துப்
பூச்சிகளும் வலம் வருகின்றன.

சு. அபிராமி
தரம் 6A

## அன்பு

அன்பு பொறுமை உள்ளது.
அன்பு தன்னைப் புகழாது.
அன்பு தற்பெருமை கொள்ளாது.
அன்பு தன்னலம் அற்றது.
அன்பு கோபம் அடையாது.
அன்பு எல்லாவற்றையும் பொறுக்கும்.
அன்பு இறுமாப்பாய் இராது.
அன்பு தற்பொழிவை நாடாது.
அன்பு சினமடையாது.
அன்பு தீங்கு நினையாது.
அன்பு சகலதையும் தாங்கும்.
அன்பு சகலதையும் விசுவாசிக்கும்
அன்பு சகலதையும் நம்பும்
அன்பு சகலத்தையும் சகிக்கும்.
அன்பு அயோக்கியமானதை செய்யாது.
அன்பு நீடிய சாந்தம் உள்ளது.
அன்பு தயவு உள்ளது.
அன்பு அநியாயத்தில் சந்தோசப்படாது.

ஸ். ஸ்ராவின்
தரம் 5A

## My Self

1. My name is Janartthanan.

2. Iam eight years old.

3.I live at Navatkuli.

4.I study at J/Navatkuli mahavidyalayam.

5. Iam in Grade three.

6.My hobby is reading news paper.

7.My favourite subjects are Tamil and Maths.

8. My father's name is Steephen.

9. My mother's name is Patmasiri.

S.Janartthanan Grade 3B

## எனது எதிர்கால விருப்பம்

நான் இனி வரும் காலத்தில் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.
நான் நல்ல பிள்ளையாக இருக்க வேண்டும்.
நான் நன்றாக படிக்கவேண்டும்.
நான் நல்ல பிரஜையாய் வளரவேண்டும்.
நான் சகல பரீட்சையிலும் சித்தி பெற வேண்டும்.
நான் சகல நாடுகளுக்கும் போய் வர வேண்டும்.
நான் சித்திரக்கலைஞர் ஆக வேண்டும்.
நான் சகல வாகனங்களையும் ஓட்டி மகிழ வேண்டும்.
நான் விளையாட்டப் போட்டியில் முதலாவதாக வந்து வெற்றிக்கிண்ணம் எடுக்கவேண்டும்.
நான் ஆங்கில மொழி நன்றாக பேச வேண்டும்.
நான் வகுப்பில் நல்ல மாணவியாக இருக்க வேண்டும்.
நான் தையல் வேலைகளில் நன்றாக தேர்ச்சி பெறவேண்டும்.

பீ.வினிப்பிரீடா தரம் 8B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுகதைகள்

1) மரஞ்செடி கொடி இல்லாத சோலை எது?

2) தண்டின் மேல் பழம், பழத்தின் மேல் செடி அது என்ன?

3) ஒரு நெல்லைக் குற்றி வீடெல்லாம் உமி அது என்ன?

4) மக்கள் வெட்டாத குளம் மழை நீர் நிரம்பாத குளம் அது என்ன?

5) அடித்தால் சிரிக்கும் அதிசயக்குழந்தை அது என்ன?

பா. திலக்சன்
தரம் 6A

விடைகள்
1) காசோலை
2) அன்னாசி
3) விளக்கு
4) இளநீர்
5) தேங்காய்

## கவிச்சோலை

### நண்பன்

*இன்பத்திலும் துன்பத்திலும்*
*இணைபிரியாமல் இருப்பவன் - நண்பன்*
*ஆபத்து வேளைகளில்*
*அஞ்சாமல் உதவுபவன் - நண்பன்*
*பசிக்கு உணவு தந்து*
*பாசத்துடன் காப்பவன்- நண்பன்*
*உயிருக்கு உயிராக*
*உண்மையுடன் இருப்பவன்- நண்பன்*
*நட்புக்காக உயிரையும் கொடுக்கும்*
*நல்ல குணம் படைத்தவன் -நண்பன்*

ஸ். பிரியதர்சினி தரம் 10 A

### உலகமும் இலங்கையும்

பொல்லாத இவ் உலகு- அதில்
புரியாத ஒரு வாழ்க்கை
இரத்தம் வாங்க துடிக்கும் - கொடிய
இரக்கம் இல்லா உலகம்
கொலை கொள்ளை என்று - கொடுமை
கொட்டிக் கிடக்கும் உலகம்
புரியாத துன்பம் தரும்
புனிதமற்ற உலகம்
இமைக்கும் பொழுதில் எதுவும் நடக்கும்
இலங்கைத்தமிழர் வாழ்க்கையில்

## மீன்கள்

வண்ண வண்ண மீன்கள்
துள்ளி ஓடும் மீன்கள்
மனதிற்கினிய மீன்கள்

மகிழ்ச்சி தரும் மீன்கள்
அன்பு காட்டும் மீன்கள்
அறிவை வளர்க்கும் மீன்கள்

அழகான மீன்கள்
விதம் விதமான மீன்கள்
கண்ணைக் கவரும் மீன்கள்

அன்பு மிக்க மீன்கள்
சிவப்பு நிற மீன்கள்
கள்ளமில்லா மீன்கள்

ந. துசாங்கன்
தரம் 6A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக வரலாற்றில் ஜூன் மாதத்தில் நடந்தவைகளில் சில......

*01-ஜூன்-1880.*

முதன் முதலாக உலகில் பொது மக்கள் வசதிக்கான பொதுத் தொலை பேசிப்பெட்டி நியூஹெவனில் இருந்த தொலைபேசி அலுவலகத்தின் முன் வைக்கப்பட்டது.

*01-ஜூன்-1912.*

பீஜிங்கில் மரணமடைந்த சீனத்தலைவர் யீ.சின் என்பவரது உடல் 3700 கி.மீ தூரத்தில் இருந்த சிங்கியாங் மாகாணத்திலுள்ள அவரது சொந்த ஊரானகாஷ்கருக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இத்தினத்தில் புறப்பட்ட இவரது இந்த இறுதி ஊர்வலம் 1913 ஜூன் 1 இல் காஷ்கரை சென்றடைந்தது.

*01-ஜூன்-1935.*

வாகனங்கள் ஓட்டக்கற்றுக் கொள்பவர்கள் அவ்வாறு கற்றுக்கொள்ளும் போது L அடையாளத்தைப் பொருத்திக் கொள்ள வேண்டும் என்ற சட்டம் முதன் முதலாக பிரிட்டனில் கொண்டுவரப்பட்டது.

*01-ஜூன்-1942.*

பிரிட்டிஷ் விமானப்படையைச் சேர்ந்த 1036 குண்டுவீச்சு விமானங்கள் கொலோன் நகர் மீது இடைவிடாது தாக்கி குண்டுமழை பொழிந்தன. இத்தாக்குதல் 2 ஆம் திகதிவரை நீடித்தது.

*01-ஜூன்-1979.*

ரொடீஷியா தனது நாட்டுப் பெயரை, ஷிம்பாப்வே ரொடீஷியா என மாற்றிக் கொண்டது.

*02-ஜூன்-1967.*

கார்ட்டூன்படம் எனக்குறிப்பிடப்படும் கேலிச்சித்திரம் முதன் முதலாக லண்டனில் இருந்து வெளிவந்த "பொலிட்டிக்கல் ரிஜிஸ்தர்" என்னும் பத்திரிகையின் இன்றைய பதிப்பில் வெளிவந்துள்ளது.

*02-ஜூன்-1983.*

வெனிரா 13 என்னும் விண்ணூர்தி வீனசின் துருவப்பகுதியை நோக்கிச் செலுத்தப்பட்டது. ஓராண்டு காலத்திற்கு மேல் இயங்கி வந்த இது, வீனசின் துருவங்களது வரைபடங்களை முதன் முதலாகப் பூமிக்கு அனுப்பியது.

*03-ஜூன்-1657.*

மனித உடலின் இரத்தச் சுற்றோட்டத்தைப் பற்றிக் கண்டுபிடித்துக்கூறிய இங்கிலாந்தைச் சேர்ந்த மருத்துவ வியலாளர் வில்லியம் ஹார்வி மரணமடைந்தார்.

*03-ஜூன்-1959.*

பிரித்தானியக் குடியேற்ற நாடாக இருந்த சிங்கப்பூர் சுதந்திர நாடாகியது.

*04-ஜூன்-1959.*

கியூபா நாட்டில் இருந்த அமெரிக்க சொத்துக்கள் அனைத்தையும் அதிபர் பிடல் காஸ்ட்ரோ நாட்டுடமையாக்கினார்.

*04-ஜூன்-1989.*

சீனாவின் பீகிங் மாநிலத்தில் தியனமென் சதுக்கத்தில் நடைபெற்ற மாணவர்களது போராட்டத்தை சீன இராணுவம் துப்பாக்கி கொண்டு அடக்கிய நாள். ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

*05-ஜூன்-1753.*

சூடான காற்றடித்த பலூன் மூலம் பறக்க முடியுமென்பதை பிரான்ஸைச் சேர்ந்த எங்கோல்வ்ஃபியர் சகோதரர்கள் மெய்ப்பித்துக்காட்டினர்.

*05-ஜூன்-1967.*

வரலாற்றிலேயே குறுகிய காலத்தில் நடந்து முடிந்த போரான அரபு-இஸ்ரேல் போர் ஆரம்பமாகிய நாள். அரபு நாடுகளது 25 விமான தளங்கள் அடியோடுஅழிக்கப்பட்டன. அங்கிருந்த எகிப்து, ஜோர்தான், சிரியா, ஈராக் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 450 போர்விமானங்கள்அழிக்கப் பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூயஸ்கால்வாய், கோலன் குன்று, மேற்கு கரை, பழையஜெருசேலம் வரை இஸ்ரேல் கைப்பற்றியது. இப்போரில் அரபுப்படைகள் 10,000 வரை இறந்தது. இஸ்ரேல் 100 படையினரையும், 26 விமானங்களையும் இழந்தது.

## 05-ஜீன்-1975.

அரபு—இஸ்ரேல் ஆறுநாள் போரின் காரணமாக 1967 ஆம் ஆண்டு போக்கு வரத்திற்காக மூடப்பட்ட சுயஸ்கால்வாய், இஸ்ரேல் கப்பல்கள் தவிர, ஏனைய நாட்டுக் கப்பல்கள் செல்வதற்காகத் திறந்து விடப்பட்டது.

## 05-ஜீன்-1988

அவுஸ்ரேலியாவின் சிட்னி நகரத்தைச் சேர்ந்த கே கோட்டி என்ற 34 வயதுப் பெண் எங்குமே தரிக்காமல் தனியாக படகில் உலகைச் சுற்றி வந்து சேர்ந்தாள். 1987 நவம்பர் 29 ஆம் திகதி சிட்னியில் இருந்து புறப்பட்ட இப் பெண், 187 நாள்களுக்குப் பிறகு இன்று சிட்னி துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தார். உலகைச் சுற்றி வந்த முதல் பெண்மணியான இவர் 11 மீற்றர் நீளமான படகில் தனது பயணத்தைத் தொடர்ந்த போது வேறு எந்தவொரு படகினோடோ, அல்லது ஆள்களிடமோ தொடர்பு வைத்துக் கொள்ளவில்லை.

## 06-ஜீன்-1844.

முதன் முதலாக வை.எம்.சி.ஏ என அழைக்கப்படும் கிருஸ்தவ இளைஞர்கழகம் ஜோர்ஜ் வில்லியம் அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## 06-ஜீன்-1882.

துணிகள், உடைகளை மடிக்க மின்சார அழுத்திப் பெட்டியை (IRON BOX) தயாரிக்கும் உரிமையை நியூயோர்க்கைச் சேர்ந்த வெஹு ன்றி டபிள்யூ.சீலி என்பவர் முதன் முதலாகப் பெற்றுக் கொண்டார்.

## 06-ஜீன்-1944.

உலக இராணுவ வரலாற்றிலேயே மிகப் பெரிய படையெடுப்பு நிகழ்ந்த நாள் D-Day எனக்குறிப்பிடப்பட்ட இந்த நாளில், வட பிரான்ஸில் நோர்மண்டி கடற்கரைப் பகுதியில் செல்கோர்க்கிற்கும், வெஹுறிக்குக்குமிடையே நேசப்படைகள் இறங்கியநாள். 4000 தாக்குதல் கப்பல்கள், 4066 கரையிறங்கு கப்பல்கள், 600 போர்க் கப்பல்கள், 347 கண்ணிவாரிக் கப்பல்கள், 18000 பரசூட் வீரர்களை இறக்க 1100 விமானங்கள், 13000 போர் விமானங்கள், இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட பலவகை வாகனங்கள், எட்டு லட்சம் தொன் போர்த்தளபாடங்கள், உணவுப் பொருட்கள், 176000 படைவீரர்கள் ஆகியவற்றை அடக்கிய ஒரு பெரிய படையணி நோர்மண்டிக்கரையில் இறங்கின.

## 06-ஜீன்-1948.

சினிமாவைக் கண்டு பிடித்த லூமியர் சகோதரர்களில் ஒருவரான லூயிஸ் ஜீன்மியர் மரணமடைந்தார்.

## 07-ஜீன்-632.

நபிகள் நாயகம் முகம்மது இவ் உலகை விட்டு மறைந்தார். அல்லாஹ் தான் ஒரே கடவுள் எனப் போதித்தவரும், இஸ்லாம் மதத்தை தோற்றுவித்தவரும் இவர்தான்.

## 07-ஜீன்-1882.

சூரியனது சுற்றுவட்டப்பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் போது வீனஸ்கோள் பூமிக்கும் சூரியனுக்கும் இடையே சென்ற நாள். ஏறக்குறைய 120 வருடங்களுக்கு ஒரு முறை இவ்வாறு நடைபெறுவதுண்டு.

## 07-ஜீன்-1898.

டபிள்யூ.ராம்சே மற்றும் எம்.டி. ராவர்ஸ் ஆகியோரால் நியான் வாயு கண்டுபிடிக்கப்பட்டது.

## 07-ஜீன்-1905.

சுவீடன் டென்மார்க்கிடம் இருந்து நோர்வே நாட்டை 1814 ஆம் ஆண்டு கொள்வனவு செய்து தனது நாட்டின் மன்னர் ஆட்சியின் கீழ் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருந்தது. இருந்தும் நோர்வேயில் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே விடுதலை இயக்கம் தோன்றி பரவ ஆரம்பித்தது. இன்று நோர்வே பாராளுமன்றமான "ஸ்டோர்ட்டிங்" சுவீடனில் இருந்து பிரிந்து விடுதலை அடைந்ததாக அறிவித்தது.

*7-ஜீன்-1992.*

புவிவளப் பாதுகாப்பு அமைக்க வளர்ந்த நாடுகள் உதவ வேண்டும் என உலக வங்கி முதன் முதலாக வேண்டுகோள் விடுத்தது.

*7-ஜீன்-1993.*

மகாத்மா காந்தியின் படத்தை தபால் தலையாக (முத்திரையாக) வெளியிட்ட நாற்பத்தி மூன்றாவது நாடான தென்னாபிரிக்கா இன்றுதான் அந்த முத்திரையை வெளியிட்டது.

*8-ஜீன்-1976.*

முன்னாள் அமெரிக்கா ஜனாதிபதி ஜிம்மிகார்ட்டர் ஜியார்ஜியாவில் லியரி என்னுமிடத்தில் 1969 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் திகதி காலை 7.15 மணிக்கு பறக்கும் தட்டைப்பார்த்ததாகக் கூறிய அவரது அறிக்கை இன்று "நெசனல் என்கொயர்" என்னும் செய்தித்தாளில் வெளியிடப்பட்டது.

தொகுப்பு : சந்துரு

எமது மனம், தானே தனது
இடத்தில் சொர்க்கத்தை
நரகமாக்கும், நரகத்தை
சொர்க்கமாக்கும்.

## தங்க அப்பிள்

சோழநாட்டில் துளஜன் என்ற மகாராஜா இருந்தான். இவன் பட்டத்து ராணி சீத்தா என அழைக்கப்பட்டாள். இவர்களுக்கு இரண்டு புதல்வர்கள் அவர்களுள் மூத்தவன் பெயர் சுல்தான். இளையவன் பெயர் துக்லக் என அழைக்கப்பட்டார்கள். இவர்கள் நால்வரும் மகிழ்வுடனும் சிறப்புடனும் சோழ நாட்டை ஆட்சி செய்து வந்தனர். இதனால் இவர்களது புகழ் எங்கும் பரவிற்று.

இவர்கள் அரண்மனை தோட்டத்தில் தங்க அப்பிள் மரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தை துளஜன் மன்னனுக்கு டில்லி மன்னன் பரிசாக வழங்கியிருந்தான். அதில் தினமும் அப்பிள் பழங்கள் மரத்தை மறைத்து காய்த்து வந்தன. தினமும் மன்னன் பட்டத்து ராணியுடன் அரண்மனைத் தோட்டம் சென்று அப்பிள் பழங்களை எண்ணுவான் அவர்கள் பழங்களை பறித்து சாப்பிட்டு விட்டு அரண்மனை திரும்பி விடுவார்கள். ஆனால் மாலை நேரத்தில் சில பழங்களை காணமுடிவதில்லை. யாரோ திருடுகிறார்கள் என்று எண்ணி காவலுக்கு தனது மூத்த மகனை அனுப்பினார். அவன் சிறிது நேரம் இருந்ததும் தூங்கி விட்டான் அவனால் கள்வரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. பின் துளஜன் தனது இளைய மகனை அனுப்பி பார்வையிடச் செய்தார். அவன் தூங்காமல் விழித்திருந்து அப்பிள் பழங்களை சாப்பிடும் கிளியைப்பிடித்தான். அதை ஒன்றும் செய்யாமல் தந்தையிடம் ஒப்படைத்தான். துளஜன் அதை ஒன்றும் செய்யாமல் அன்பாகத் தடவி முத்தமிட்டு தினமும் அந்தக் கிளிக்கு இரண்டு அப்பிள்கள் வழங்கி தாமும் உண்டு சோழநாட்டை மகிழ்ச்சியுடன் ஆண்டு வந்தனர்.

சு.டிலந்தன் தரம் 5A

## வன்முறைகள்

சிதைந்து போன என்னுடல்,
பிரிந்து போன கைகள்,
உன் வன்முறைகளுக்கு
இதுவோ தேடல்?
மனித நேயமற்ற உறவுகளே,
நீங்கள் சாதிக்க சதைத்துண்டங்களா தேவை?

எடுத்துக் கொள்ளுங்கள்
எஞ்சியிருக்கும்
என் கால்களையும் என்
உயிரையும்
வன்முறைகள் தீருமென்றால்
என்னிழப்பு பெரிதல்ல

பெ.சிபோறா தரம் 9B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவு

1. பகவத் கீதையை எதிர்த்த நாடு எது?
   பாகிஸ்தான்
2. எயிட்ஸ் நோய் அதிகமாக உள்ள கண்டம் எது?
   ஆபிரிக்கா
3. ஜி 8 நாடுகளில் இறுதியாக சேர்ந்து கொண்ட நாடு எது?
   ரஷ்யா
4. உலகிலே மிகப் பெரிய (33m) கிறிஸ்மஸ் தாத்தாவை 2005 இல் உருவாக்கி கின்னஸ் சாதனையில் இடம் பிடித்த நாடு எது?
   போர்த்துக்கல்
5. கப்பலில் மஞ்சள் கொடி காட்டப்படுவதன் கருத்து யாது?
   தொற்றுநோய்
6. நோபல் பரிசு எத்தனையாம் ஆண்டு முதல் முதலாக வழங்கப்பட்டுள்ளது?
   1901 ஆம் ஆண்டு
7. தாஜ்மகால் கட்டி முடித்த ஆண்டு எது?
   1654 ஆம் ஆண்டு
8. சுனாமி என்ற ஜப்பானிய சொல்லின் கருத்து எது?
   துறைமுக அலை

தாரங்கினி கோணலிங்கம்
தரம் 6A

## தகவல் துளிகள்

1) 2002 ஆம் ஆண்டுக்கான சமாதான நோபல் பரிசு அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான ஜிம்மி காட்டருக்கு வழங்கப்பட்டது.
2) உலகில் மிகப் பெரிய நூதனசாலை நியூயோர்க்கில் "மிவுஸியம் ஒவ் ஹிஸ்ரரி" ஆகும்.
3) "கவிக்குயில்" என்று அழைக்கப்படுபவர் சரோஜினி நாயுடு
4) இலங்கையின் முதலாவது பெண்கள் பாடசாலை உடுவில் மகளிர் கல்லூரி ஆகும்.
5) இலங்கையில் யானைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம் பின்னவெல
6) உலகின் மிகப் பெரிய தீவு கிறீஸ்லாந்து
7) உலகின் நீளமான நதி நைல்நதி
8) நோபல் பரிசு பெற்ற முதல் தமிழர் சேர் C.V இராமன்
9) தமிழ் மொழி அகராதியை முதலில் தொகுத்தவர் கதிரவேற்பிள்ளை
10) செல்போனை சுவிஸ்லாந்து அறிஞர் Dr.ஜே.பிரான்டன்பெக்கர் 1908 இல் கண்டுபிடித்தார்.
11) நீரிழிவு நோயைக் கண்டு பிடித்தவர் கனடா நாட்டு பென்டிக் கெஸ்ட் (1921)
12) கணனித் துறையின் தந்தை சாள்ஸ்பபேஜ் என்ற நிபுணர்
13) சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் D.S சேனநாயக்கா ஆவார்.
14) முதன் முதலில் எவரெஸ்ற் சிகரத்தின் உச்சியில் ஏறியவர் எட்மண்ட்ஹிலாரி என்ற வீரர் ஆவார்.

தி.புஸ்பரூபன் தரம் 8 A

## என்னை இழந்தேன்

முல்லைப் பூவாய் முகத்தில் சிரிப்பு
தொல்லை இல்லா உள்ளத் தெளிவு
பொன்னைப்பார்ப்பது போல் உன் கண்கள்
உன்னைப் பார்த்ததால் என்னை இழந்தேன்

உந்தன் வார்த்தைகள் கவிதையாய்ப் பொழியும்
எந்தன் மனது காற்றில் பறக்கும்

தாயின் மடியில் தூங்கி விடுவாய்
வாயின் அடியில் முத்தம் தருவாய்
பொன்னைப்பார்ப்பது போல் உன் கண்கள்
உன்னைப் பார்த்ததால் என்னை இழந்தேன்

ர.நிதர்சன் தரம் 7A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனக்கு நடந்த துயரமான நிகழ்வு.

எனது வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவம் அது. ஒரு துயரமான சம்பவம். நான் கடைக்குச் சென்று வீட்டு வீடு செல்லும் போது தூரத்தில் ஒரு மோட்டார் வாகனம் வந்து கொண்டிருந்தது. நான் கையில் மாவுடன் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தேன். அப்பொழுது எதிர்பாராத விதமாக ஒரு அண்ணா ஓட்டி வந்த மோட்டார் வாகனம் என் காலில் மோதி அடித்தது. நான் விழுந்த உடனே மா சிதறுண்டு கிடந்தது. அதைக்கண்ட அயலவர்கள் ஓடிவந்து என்னைத் தூக்கினர். என் கால்களில் இரத்தம் பாய்ந்தோடியது. அம்மா, அப்பா தாத்தா, அண்ணா இவர்கள் என்னை வைத்தியசாலைக்கு கொண்டு போனார்கள். அங்கே என் கால்களில் மருந்தைக்கட்டி வீட்டிற்கு கொண்டு சென்றார்கள். என்னைப்பார்க்க அந்த அண்ணா வந்தார். அவரைக் கண்டதும் நான் பயந்து போனேன். அவர் வந்து நான் தடுமாறி மோட்டார் சைக்கிளால் உங்களை அடித்து விட்டேன். என்னை மன்னிக்கவேண்டும் என்று சொன்னார். அம்மா, அப்பாவோடு கதைத்தார். அந்த நிகழ்ச்சி எனக்கு துயரமான நிகழ்வு. இன்றும் அது அப்படியே நினைவில் நிற்கிறது.

ஜெ.புளோரா தரம் 8B

## எனது நண்பி.

எனது நண்பி சிந்துவின் குடும்பம் ஓர் அழகிய நந்தவனம். அன்பிற்கு அப்பா சிவா, அரவணைப்பிற்கு அம்மா நிர்மலா, பாசத்திற்கு அக்கா சங்கீதா, அண்ணா சஞ்சீவன், தம்பி சயந்தன் என இவர்களது குடும்பம் ஒரு பூந்தோட்டம். நண்பியும் நானும் உடலும் உயிரும் போல எப்போதும் இணைந்திருப்போம். இவளின் அப்பா காலை 6.00 மணிக்கு வேலைக்கு செல்வார். அம்மா காலையில் உணவு தயார் செய்வார். இவர்கள் நான்கு பேரும் பாடசாலை செல்வார்கள். சிந்துவின் வீடு மூன்று அறை இரண்டு கோல், சமையல் அறை ஆகியவற்றைக் கொண்ட ஒரு சிறிய கோவில் போல அழகானது. இவள் தனது வீட்டுப்பிரச்சனைகளை என்னிடம் கூறுவாள். நானும் ஆறுதல் சொல்வேன். சிந்து தனது வீட்டிற்கு அடிக்கடி என்னை அழைப்பாள். நானும் அவளை அடிக்கடி எனது வீட்டிற்கு அழைப்பேன். முல்லைப் பூப்போல் இருந்த அவளது குடும்பத்தில் ஒருநாள் பூகம்பம் வெடித்தது. எனது சிந்து ஒரு நாள் பாடசாலையில் மயக்கமாகி விட்டாள். இவள் சிலமணி நேரம் கண்கள் திறக்கவில்லை இவளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

இவளுக்கு ஏதோ சகயீனமாம் வைத்தியர்கள் கூறினார். சிலமாதங்களின் பின் இவளுக்கு குணமாகி விட்டது. எனது சிந்துவின் குடும்பத்தில் மீண்டும் முல்லைப்பூக்கள் மலர்ந்தன. சிந்துவின் குடும்பம் இன்றுபோல் என்றும் இருக்க இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

உயிருக்கு உயிராய் அவளுக்கு நானும் எனக்கு அவளுமாய் என்றும் இணைந்திருப்போம்.


இ. தேனுசா தரம் 7 A

நன்றியுணர்வென்பது பெரிய பண்பாட்டின் களம் சாதாரண மக்களிடம் அது காணப்படுவதில்லை. நன்றி மறப்பது என்பது மனிதர்களுடைய மிகவும் இயல்பான ஒன்று. எனவே எம்மைச் சுற்றியுள்ளவர்கள் யாவரும் நன்றியுடன் இருப்பர் என நம்பி இருப்போமாயின் நிறையத் தலையிடியை வாங்கிக் கொள்வதற்கு ஆயத்தமாகிறோம் என்பதாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எங்கள் தூரிகைகளில் இருந்து....




K.Lajantha 10B



K.Duvaratha 7A



மு.முரளிதரன் 10A




ஸ. பரமநாதன்




மு.முரளிதரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**A.Mayuri**
**9A**



த.திவாகரன் **10A**





கு.டன்சிகா **10A**



செ.றொசான் **8A**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பியூலஸ்
**8A**

**உளநலத்திறன் விருத்திக்கழகம்,**
**யா/நாவற்குழி மகாவித்தியாலயம்,**
**செயற்குழு விபரம் –2008**

**காப்பாளர்:**
திருமதி .வ.மேகலிங்கம்
அதிபர் யா/நாவற்குழி ம.வி.

**தலைவர்:**
செல்வன்.வீரசிங்கம் ரேகன்
(தரம் 13)

**உபதலைவர்:**
செல்வன் சத்தியராஜ்
மோசிகன் (தரம் 7)

**செயலாளர்:**
செல்வி சுப்பிரமணியம்
கயானி (தரம் 10)

**பொறுப்பாசிரியர்:**
திரு.வே.க.சந்திரகுமார்

**பொருளாளர்:**
செல்வன்.பதி.லகிந்தன் (தரம் 10)

**இதழாசிரியர்கள்:**
செல்வன். திருச்செல்வம்
புஸ்பகாந்
செல்வி.ஸ்ரீபன் பிரியதர்சினி

**வகுப்புப் பிரதிநிதிகள்:**
தரம் 6: செல்வி நரேந்திரராஜா பவதாரணி
தரம் 7: செல்வி வேலாயுதம் பிரகா
தரம் 8: செல்வி அழகராசா அபிநயா
தரம் 9: செல்வி குகதேவன் நிதூசனா
தரம் 10:செல்வன் பரராஜசிங்கம் தமிழரசன்
தரம் 12: செல்வி அருமைராசா அகலிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவுப்போட்டி

அன்பான மாணவர்களே!

அகமலர்கள், உங்கள் வாசிப்பு மற்றும் கிரகித்தல் திறனை மேம்படுத்தும் நோக்கில் அறிமுகப்படுத்தும் போட்டியே இந்தப் பொது அறிவுப்போட்டி ஆகும்.

இங்கே கேட்கப்படும் வினாக் களுக்கு உரிய சரியான விடைகளை இந்த அகமலர்கள் சஞ்சிகையிலேயே ஏதாவது ஒரு பக்கத்தில் உங்களால் கண்டறியக் கூடியதாக இருக்கும். முயற்சி செய்யுங்கள். முயற்சி திருவினையாக்கும்.

உங்கள் விடைகள் யாவும் நவம்பர் மாதம் 30ம் திகதிக்கு முன்பாக அகமலர்களைவந்து சேரக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். சரியான விடையனுப்பி வைக்கும் மூன்று அதிர்ஷ்ட சாலிகளுக்கு பணப்பரிசுகள் வழங்கப்படும்.

## பரிசில் விபரம்;

முதலாவது பரிசு;
அமரர் கணேஷ் சந்திரகாந்தன் நினைவாக வழங்கப்படும் 250/= பெறுமதியான பணத்தொகை

இரண்டாவது பரிசு;
அமரர் வே. பாலசுப்பிரமணியம் அவர்களது நினைவாக வழங்கப்படும் 200/= பெறுமதியான பணத்தொகை

மூன்றாவது பரிசு;
திரு.திருமதி சோமசுந்தரம் அவர்களது நினைவாக வழங்கப்படும் 150/= பணத்தொகை.

### பொது அறிவுப் போட்டி இல:04

வினாக்கள்:

1) புவிவெப்பாட நாட்டுக்கு வளர்ந்த நாடுகள் உதவ வேண்டும் என உலக வங்கி முதன் முதலாக எப்பொழுது அழைப்பு விடுத்தது?

02)இஸ்லாம் மத நதோற்றுவித்தவர் யார்?

03)உலகில் மக்கள் வாழ்வதற்குரிய மிகச்சிறந்த நகரமாக எது தெரிவு செய்யப்பட்டுள்ளது?

04)வன்முறை என்ற தலைப்பிலான கவிதையை எழுதியவர் யார்?

05)சேர்.பொன்.இராமநாதன் அவர்களது பிறந்த ஊர் எது?

06)மனித உடலின் இரத்தச்சுற்றோட்டத்தைக் கண்டுபிடித்துக் கூறியவர் யார்?

07)சூடான காற்றடித்த பலூன்மூலம் பறக்க முடியும் என்பது யாரால் எப்பொழுது நிரூபித்துக்காட்டப்பட்டது?

08)"திருப்புமுனை கிடையாது...." என்ற வரிகள் இடம் பெற்ற கவிதையின் தலைப்பு என்ன?

09)அகிலமே மாறினாலும்.... என்ற வரிகள் இடம் பெற்ற கவிதையின் தலைப்பு என்ன?

10) இதனாலும் நினைவாற்றல் பாதிக்கப்படுமாமே அது எது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநோதப் புதிர்ப்போட்டி

அன்பான மாணவர்களே,

உங்களது விவேகத்திறனுக்கு சவால் விடும் பக்கமாக அகமலர்கள் தாங்கி வரும் பக்கம் இதுவாகும்.

தொடர்ந்து வரும் அகமலர்கள் இப்பக்கத்தில் உங்களது விவேகத்திறனை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறுபட்ட புதிர்ப் போட்டிகளைத் தாங்கியதாகவே வெளிவரும்.

இப்போட்டிகளில் கலந்து கொண்டு சரியான விடைகளை அனுப்பும் மாணவர்களில் பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்படுவர்கள் தேர்வு செய்யப்படும் வெற்றியாளர்கட்கு,

முதலாவது பரிசாக மறவன்புலோவைச் சேர்ந்த அமரர் வே. தில்லைநாதன் அவர்களது ஞாபகார்த்தமாக வழங்கப்படும் 300/= பணத்தொகையும்


இரண்டாம் பரிசாக நாவற்குழியூரைச் சேர்ந்த அமரர். சி. இராமலிங்கம் அவர்களது ஞாபகார்த்தமாக வழங்கப்படும் 250/= பணத்தொகையுகும்

மூன்றாம் பரிசாக நாவற்குழியைச் சேர்ந்த அமரர். நா. கோபலசிங்கம் அவர்களது ஞாபகார்த்தமாக வழங்கப்படும் 200/= பணத்தொகையும் பரிசாக வழங்கப்படும்.

பரிசு பெறும் மாணவர்களது விபரம் அடுத்து வரும் அகமலர்களில் பிரசுரமாகும். மாணவர்களே உங்கள் விடைகள் யாவும் கீழ்வரும் முகவரிக்கு நவம்பர் 30ஆம் திகதிக்கு முன்பாக வந்து சேர வேண்டியது முக்கியமானதாகும்.

விநோத புதிர்ப் போட்டி,<br>
அகமலர்கள்,<br>
உளநலத் திறன் விருத்திக் கழகம்,<br>
யா/நாவற்குழி, மகா வித்தியாலயம்.<br>
நாவற்குழி, கைதடி.

## வினோத புதிர்ப்போட்டி இல 03 இன் விடைகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநோதப் புதிர்ப் போட்டி இல.04
## சொற்களஞ்சியம்.

மாணவர்களே!

இங்கே பன்னிரு சொற்கள் தரப்பட்டுள்ளன. அதன் கீழே ஒரு கட்டம் தரப்பட்டுள்ளது. தரப்பட்டுள்ள சொற்களை கட்டங்களுக்கள் வலமிருந்து இடமாகவோ, இடமிருந்து வலமாகவோ, மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ நிரப்புதல் வேண்டும். ஒரு எழுத்தை ஒரு கட்டத்துள் மட்டும் நிரப்புவதுடன், ஒரு சொல்லை இரண்டுமுறை பயன் படுத்தவும் கூடாது. எங்கே முயற்சி செய்யுங்கள் சுயமாகத் தயாரித்த படிவத்தை சரியான வகையில் நிரப்பி நவம்பர் 30க்கு முன்பாக அனுப்பி வையுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| கன்னம், | சகோதரி, | திட்டம், | முயற்சி. |
| முகவரி, | அமாவாசை, | கப்பல், | அஞ்சல் |
| சப்தம், | அகராதி, | அஹிம்சை, | சிம்மம் |



2008ஆம் ஆண்டிற்கான ஆங்கில தினப் போட்டியில் தென்மராட்சி வலய மட்டத்திலும் யாழ் மாவட்ட மட்டத்திலும் Copy writing இல் முதலிடம் பெற்றுக் கொண்ட செல்வி S. டிலக்சனா அவர்களின் கையெழுத்துப் பிரதி

Last evening I saw a group of young boys all in their teens riding the Merry-Go-round for under tens, as if they were in a frenzy. The Merry-Go-Round was going so fast it made even the onlookers dizzy. I don't know how long a Merry-Go-Round would last under these circumstances.

I wonder whether people know that these public utilities are paid for by all of us in the form of taxes and rates? That is the only way by which we can get to enjoy these conveniences and luxuries as we cannot afford them by ourselves single handed. Therefore you and I, and all of us have paid for these in some measure or other.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களது இலத்திரனியல் பொருட்களில் ஏற்படும் சகல விதமான பழுதுகளையும்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

- உரியவேளையில்
- உத்தரவாதத்துடன்
- நியாயமான கட்டணத்தில்

திருத்திக் கொள்ள தென்மராட்சிப் பகுதியில் சேவை நோக்கோடு இயங்கும் ஒரே ஒரு நிறுவனமான எங்களை நாடுங்கள்,

## தொழிற்பயிற்சி நிலையம்
## வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் பிரிவு
## யா/ நாவற்குழி மகாவித்தியாலயம்
## நாவற்குழி, கைதடி.

குறிப்பு:

பாடசாலைகளின் இலத்திரனியல் பொருட்கள் மிகக் குறைந்து சேவைக்கட்டணத்தோடு சீராக்கித் தரப்படும்

*உங்கள் திருப்தியே எங்கள் விருத்தி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகமலர்கள் தொடர்ந்தும்
சிறப்புடன் வெளிவர
வாழ்த்துகின்றோம்

# தென்மராட்சி மேற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

**மானிப்பாய் வீதி, கைதடி.**

## ஊர் சிறக்க நாம் செய்யும் சேவைகளில் சில.

- கிராமிய வங்கிச் சேவை.
- தொலைபேசி, தொலைநகல் சேவை.
- வாகன சேவை.
- மக்கள் கடை.
- பிடவை விற்பனை நிலையம்.
- எரிபொருள் நிரப்பு நிலையம்.
- நிவாரண விநியோகங்கள்.
- உலக உணவுத் திட்ட விநியோகங்கள்.
- கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தி வேலைகள்.
- மாதரி விற்பனை நிலையம்.

**தென்மராட்சி மேற்கு மக்களின் உலர் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒரே சமூக நிறுவனம்**

தென்மராட்சி மேற்கு பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

பிள்ளையார் நோக்குப் பதிப்பகம், நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org